**SC.No. 72/2025**
**நாள். 07.03.2026.**
**அ.சா. 3 –** தஸ்மியாபானு , க/பெ.முகம்மது அப்பாஸ்
<u>(எதிரி ஆஜர்.)</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

என் கணவருக்கு அப்பா இல்லை, தாயார் மற்றும் உடன் பிறந்தவர்கள் உள்ளார்கள். என் கணவர் வீடு நம்புதாளையில் கிழக்கு தெருவில் உள்ளது என்றால் சரிதான். முகம்மது அபுபக்கர் இறந்த சமயம் நான் என் கணவர் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல, நான் தனியாக இருந்தேன். அப்போது என் கணவர் அவரது பெற்றோர் வீட்டில் இருந்தாரா என்றால் இல்லை, கோயம்புத்துாரில் இருந்தார். நான் குடியிருந்த வீடு வாடாகை வீடு என்றால் சரிதான், வீட்டின் உரிமையாளர் யார் என்றால் தொண்டியை சேர்ந்த புரோஸ்கான். நான் குடியிருந்த வீடு தனி காம்பவுண்டில் இருந்தது என்றால் சரிதான். நான் குடியிருந்த வீட்டை ஒட்டி வேறுபல வீடுகளும் இருந்ததா என்றால் நான் குடியிருந்த வீட்டிற்கு வடக்கே என் அக்கா குடியிருந்த வீடு உள்ளது, பக்கத்திலும் வீடுகள் உள்ளன. பக்கத்தில் குடியிருந்தவரின் பெயர் தெரியுமா என்றால் புதுப்பட்டினத்தை சேர்ந்த பாத்திமா. 30.06.2024 ம் தேதி – 01.07.2024 ம் தேதி இரவு 11.30 மணியளவில் நான் சிறுநீர் கழிக்க சென்ற இடத்திற்கும் இரண்டு நபர்கள் பேசிக்கொண்டிருந்த இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 20 – 30 அடி துாரம் இருக்கும். அந்த இரண்டு நபர்கள் பேசிக்கொண்டிருந்தஇடம் நான் குடியிருந்த வீட்டு காம்பவுண்டுக்கு வெளியே என்றால் சரிதான், செய்யதலிபாத்திமா வீட்டு கொல்லைக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். பேச்சுக்குரல் கேட்ட இடத்தில் வெளிச்சம் கிடையாது, இருட்டாக இருந்தது என்றால் நான் அதை கவனிக்கவில்லை. யார்யார் பேசிக்கொண்டிருந்தார்கள் என நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் அக்காவை திருமணம் செய்து கொடுத்த வீடு நம்புதாளையில் மேலத்தெருவில் உள்ளது என்றால் சரிதான். நான் இயற்கை உபாதை கழிக்க சென்ற பாத்ரூம் யாருடைய வீட்டிற்குள் உள்ள பாத்ரூம் என்றால் நான் குடியிருந்த வீட்டில் உள்ள பாத்ரூம். அந்த பாத்ரூமின் வாசல் எந்த திசைநோக்கி உள்ளது என்றால் கிழக்குப்பக்கம். நான் குழநதைகள் துாங்கிக்கொண்டிருந்ததால் அவசரஅவசரமாக

சிறுநீர் கழித்துவிட்டு திரும்பிவிட்டேன் என்றால் சரிதான். நான் அவசரஅவசரமாக சிறுநீர் கழித்துவிட்டு சென்றதால் வெளியே பேச்சுக்குரல் கேட்டதாக கவனித்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் குடியிருந்த வீட்டில் எத்தனைபேர் இருந்தோம் என்றால், நான், என் அப்பா மற்றும் மகன் இருந்தோம். என் அம்மா அப்போது இறந்துவிட்டார். என் அப்பாவிற்கு நம்புதாளையில் சொந்த வீடு உள்ளது என்றால் இல்லை. நான் பேச்சுக்குரலை கேட்ட பிறகு வீட்டிற்குள் வந்து துாங்கிவிட்டேன் என்றால் சரிதான். அதனால் அதற்கு பின்பு என்ன நடந்தது என்ற விவரம் அடுத்தநாள் காலையில்தான் தெரியும் என்றால் நான் வந்து படுத்த பிறகு என் அப்பா போதையில் இந்த நேரத்தில் வந்து தீப்பெட்டி எதிரி கேட்கிறான் என்று பேசிக்கொண்டார், ஆனால் அப்போது என் அப்பா நல்லபோதையில் தெளிவற்றநிலையில் இருந்தார். என் அப்பாவிற்கும், எதிரிக்கும் அதற்கு முன்பு பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரியல்ல, பார்த்தால் பேசிக்கொள்வார்கள். நான் வந்து படுத்த பிறகு யார் வந்து என் அப்பாவிடம் தீப்பெட்டி கேட்டார்கள் என்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் மறுநாள் காலை 11.00 மணியளவில் விசாரித்தார்கள். முகம்மது அபுபக்கர் இறந்துகிடந்த விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் மறுநாள் காலை 09.00 மணியளவில். முகம்மது அபுபக்கர் இறந்துகிடந்ததை நான்தான் முதலில் பார்த்தேன் என்றால் சரியல்ல. முகம்மது அபுபக்கர் இறந்துகிடந்ததை அவரது வீட்டிற்கு யார் தகவல் தெரிவித்தது என்றால் தெரியாது. நான் முதல் விசாணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அக்கா செய்யதலிபாத்திமா என் வீட்டிற்கு அருகில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அக்காவின் கணவருக்கும், என் அக்காவுக்கும் அடிக்கடி சண்டை வந்ததால் அவர்கள் பிரிந்து வாழ்ந்தார்கள் என முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோது சிறுநீர் கழிக்க சென்றபோது இரண்டு நபர்கள் பேசிகொண்டிருந்தார்கள் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதில் ஒரு குரல் எதிரியின் குரல் என முதல் விசாரணையில் சொன்னது பொய் என்றால் சரியல்ல. அப்போது எதிரி உன்னை என் மாமிபையன்தானே என வீட்டிற்குள் விட்டேன் என்று

அந்த நபரை பார்த்து சொன்னதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. அப்போது மற்றொரு நபர் உன் தம்பி புர்கான் எங்கே என்று கேட்டான் என முதல் விசாரணையில் சொன்னதும் பொய் என்றால் சரியல்ல. அதற்கு எதிரி நான் என்ன கேட்கிறேன், நீ என்ன சொல்கிறாய் என சொன்னார் என்று முதல் விசாரணையில் சொன்னதும் பொய் என்றால் சரியல்ல. என் அப்பா தீப்பெட்டி கேட்டதை திட்டிக்கொண்டு வந்து படுத்தார் என சொன்னதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொன்னது மாதிரி என் அப்பா என்னுடன் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னது மாதிரி எதுவும் நடக்கவில்லை என்றும், போலிசார் என்னிடம் இதுமாதிரி சொல்லுங்கள் என சொல்லிக்கொடுத்ததின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**SC.No. 72/2025**
**நாள். 07.03.2026.**
**அ.சா. 2 –** முகம்மது இஸ்மாயில், த/பெ.சிராஜீதீன்
(எதிரி ஆஜர்.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் என் அப்பா நடத்தி வரும் டீக்கடையில் வேலை பார்த்து வருகிறேனா என்றால் இல்லை. எதிரியின் வீடு நாங்கள் எந்த தெருவில் வசிக்கிறோமோ அந்த தெருவில்தான் இருக்கிறது என்றால் சரிதான். எதிரி அவரது பெற்றோர் மற்றும் சகோதர, சகோதரிகளுடன் ஒரே வீட்டில் குடும்பமாக வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. இறந்துபோன என் தம்பி முகம்மது அபுபக்கர் சென்னையில் ஹோட்டலில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் தம்பி இறந்த நாள் பக்ரீத் அன்றா என்றால் இல்லை, பக்ரீத்துக்கு பிறகு. என் தம்பி முகம்மது அபுபக்கர் சம்பவம் நடந்த அன்று வெளியே போகும்போது நான் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. இறப்பதற்கு முன்பு என் தம்பி வெளியே செல்வதற்கு முன்னால் அன்று பகல் என் தம்பி வெளியே சென்றார் என்றால் சரிதான். அன்று பகல் தொண்டி டாஸ்மாக் கடையில்வைத்து பாசிப்பட்டினத்தை சேர்ந்தவர்களுடன் ஏற்பட்ட தகராறில் என் தம்பியின் மண்டையை உடைத்து விட்டார்கள் என்றால் சரியல்ல, சோழியக்குடி டாஸ்மாக்கில் வைத்து தொண்டியை சேர்ந்த நபர்கள் மண்டையை உடைத்துவிட்டார்கள். அதற்காக என் தம்பி நம்புதாளையில் உள்ள ஒரு மருத்துவரிடம் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். அன்றே என் தம்பி இராமநாதபுரம் சென்று ஸ்கேன் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். என் தம்பிக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் தம்பி சென்னையில் வேலை பார்க்கும்போதும், ஊருக்கு வரும்போதும் குடித்துவிட்டு பலநபர்களுடன் தகராறு செய்வதை பழக்கமாக கொண்டிருப்பார் என்றால் சரியல்ல. என் தம்பியை டாஸ்மாக் கடையில் அடித்த நபர்களை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், அதற்கு பின்பும் எங்கள் வீட்டிற்கு தகராறு செய்ய வந்தார்கள். வீட்டிற்கு வந்த நபர்கள் இரண்டுபேர். ஒருவர் பெயர் அப்துல்லா, மற்றொருவர் பெயர் கலீல் ரகுமான். என் தம்பியை அடித்ததற்காக அந்த இருவர் மீதும் நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தம்பி இறந்த அன்று என் அப்பா வாங்கி வந்த சிக்கன்ரைசை

எடுத்துக்கொண்டு என் தம்பி வெளியே சென்றார் என்றால் சரிதான். அவ்வாறு வெளியே சென்று நண்பர்களுடன் மது அருந்திவிட்டுத்தான் சிக்கன்ரைசை சாப்பிட்டார் என்றால் வெளியே சென்று சாப்பிடுவதாகத்தான் சொல்லிவிட்டு சென்றார், மது அருந்திவிட்டு சாப்பிட்டாரா என்பது தெரியாது. என் தம்பி சிக்கன்ரைசை எடுத்துக்கொண்டு மது அருந்திவிட்டு நண்பர்களுடன் சேர்ந்து சாப்பிடும்போது அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தம்பி வெளியே சென்ற இரவு முழுவதும் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரிதான். இரவு முழுவதும் என் தம்பியை நாங்கள் தேடவில்லை என்றால் சரிதான். மறுநாள் என் தம்பி இறந்துகிடந்த விவரத்தை என்னிடமும், என் அப்பாவிடமும் யார் சொன்னார்கள் என்றால் எதிரியின் மகன் தெருவிலும், எங்கள் வீட்டிலும் வந்து என் தம்பி இறந்துகிடக்கும் விவரத்தை சொன்னான். போலிசார் என்னை விசாரிக்கும்போது என் தம்பி இறந்த விவரத்தை எதிரியின் மகன் எங்கள் வீட்டிற்கு வந்து சொன்னான் என சொன்னேன் என்றால் சரிதான். அவ்வாறு சொல்லும்போது மணி காலை 08.00 இருக்குமா என்றால் சுமார் 08.45 மணியிருக்கும். உடனே நானும், என் அப்பாவும் நேரடியாக காவல்நிலையத்திற்குத்தான் சென்றோம் என்றால் இல்லை. முதலில் நான்தான் என் தம்பி இறந்துகிடந்த இடத்திற்கு சென்றேன். அதற்கு பின்தான் என் அப்பா வந்தார். என் அப்பா தொண்டி டீக்கடையில் இருந்தபோது நான் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் வந்தார் என்றால் சரிதான். நானும், என் அப்பாவும் காவல் நிலையத்திற்கு காலை 09.00 மணிக்கு சென்றுவிட்டோம் என்றால் 09.00 மணிக்கு மேல் இருக்கும். காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தது யார் என்றால் என் அப்பா. புகாரில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் ஞாபகமில்லை. என் அப்பா புகார் கொடுத்த பின்பு போலிசார் என்னை எப்போது விசாரித்தார் என்றால் அன்று மாலை. போலிசார் என்னை விசாரித்தபோது என் தம்பி செய்யதலி பாத்திமா வீட்டு காம்பவுண்டுக்குள் இறந்துகிடப்பதாக ஒருநபர் சொன்னார் என நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும், என் அப்பாவும் என் தம்பி இறந்துகிடந்த இடத்திற்கு செல்லும்போது எங்கள் ஊர்க்காரர்களும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் என் தம்பி இறந்துகிடந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே யாரோ போலிசுக்கு தகவல் சொல்லி போலிசாரும் அங்கு இருந்தார்கள் என்றால் சரியல்ல.

காவல் நிலையத்திற்கு நாங்கள் புகார் கொடுக்க சென்றபோது காவல் நிலையத்தில் எதிரி இருந்தார் என்றால் சரியல்ல. ஆனால் நாங்கள் காவல் நிலையத்தில் இருக்கும்போதே எதிரியை போலிசார் அழைத்துவந்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் எதிரியை போலிசார் அடித்தார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும்போது எம் தம்பிக்கும், எதிரியின் மனைவிக்கும் தவறான உறவு இருந்ததாக எதிரி ஊரில் சொல்லிக்கொண்டு வந்தார் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது என் தம்பி எதிரியின் வீட்டில் இறந்துகிடந்ததாலும், எதிரியின் மனைவியுடன் தவறான உறவில் இருப்பதாக ஊரில் சொல்லிக்கொண்டு வந்ததால் எதிரி கொலை செய்திருக்கலாம் என நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எதிரியை பிடித்து விசாரித்தபோது அவர்தான் என் தம்பியை கொலை செய்ததாக ஒப்புக்கொண்டார் என போலிசார் விசாரணையின்போது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது என் தம்பியின் முகத்தில் குழவிக்கல்லைப்போட்டு எதிரிதான் கொன்றதாக எதிரி போலிசாரிடம் சொன்னார் என்ற விவரத்தை போலிசார் என்னிடம் சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பிக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றும், அந்த பழக்கத்தினால் அவர் பலநபர்களுடன் தகராறு செய்வார் என்றும், அதனால் அவருக்கு பலநபர்களுடன் முன்விரோதம் உண்டு என்றும், அந்த முன்விரோதத்தின் அடிப்படையில் என் தம்பியின் இறப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. என் தம்பியின் இறப்பிற்கும், எதிரிக்கும் எந்தவகையிலும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**SC.No. 72/2025**
**நாள். 07.03.2026.**
**அ.சா. 1 –** சிராஜுதீன், த/பெ.அப்துல் வாகீது
<u>(எதிரி ஆஜர்.)</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> –

எனக்கு மொத்தம் 5 குழந்தைகள் என்றால் சரிதான். இறந்துபோன முகம்மது அபுபக்கர் என் 2 வது குழந்தை என்றால் சரிதான். என் முதல் மகன் மற்றும் 3, 4 மகன்களுக்கு திருமணமாகிவிட்டது என்றால் இல்லை. என் மகன்கள் யாருக்கும் திருமணமாகவில்லை. என் மகன் முகம்மது அபுபக்கர் சென்னையில் ஹோட்டலில் வேலை பார்த்தான் என்றால் சரிதான். சென்னையில் வேலை பார்க்கும்போது ஊருக்கு எப்போதாவதுதான் வருவார் என்றால் சரியல்ல. முகம்மது அபுபக்கருக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரிதான். என் மகன் சென்னையிலிருந்து ஊருக்கு வந்தால் பெருமபாலும் வீட்டில்தான் இருப்பான் வேறுஎங்கும் செல்லமாட்டான் என்றால் சரியல்ல, நண்பர்களோடு வெளியே சென்று மது அருந்துவான் என்றால் சரிதான். சம்பவ நடந்த சமயம் என் மகன் பக்ரீத்துக்காகத்தான் சென்னையிலிருந்து ஊருக்கு வந்திருந்தான் என்றால் சரிதான். பக்ரீத்துக்கு வந்தவன் அன்று பகல் முழுவதும் எங்கள் வீட்டில்தான் இருந்தான் என்றால் சரிதான். தொழுகைக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்தவன் செல்போனில் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தான் என்றால் சரியல்ல. பக்ரீத் என்பதால் மதிய உணவு மற்றும் இரவு உணவு பலவகையான உணவு தயார் செய்து வைத்திருந்தோம் என்றால் சரிதான். என் மகன் முகம்மது அபுபக்கர் பக்ரீத் அன்று வீட்டில் இரவு உணவு சாப்பிட்டுவிட்டுத்தான் வெளியில் சென்றார் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த சம்பவம் பக்ரீத் அன்றுதான் நடந்தது இல்லை. ஜீன் 17ம் தேதி பக்ரீத்துக்காக வந்தவர் ஜீன் 30ம் தேதி வரை சென்னைக்கு திரும்பி செல்லவில்லை என்றால் சரிதான். பக்ரீத்துக்காக வந்தவர் தினமும் நண்பர்களுடன் வெளியே சென்று மதுஅருந்திவிட்டு வருவார் என்றால் சரிதான். என் மகன் இறந்த அன்று மாலை பாசிப்பட்டினத்தை சேர்ந்த சிலர் தொண்டி டாஸ்மாக் கடையில் வைத்து என் மகனுடன் தகராறு செய்து என் மகனின் மண்டையை அடித்து உடைத்துவிட்டார்கள் என்றால், சோழியக்குடியில் வைத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். அவ்வாறு மண்டை உடைந்ததற்கு என் மகன் தொண்டியில்

உள்ள மருத்துவரிடம் மருத்துவம் பார்த்தான் என்றால், நம்புதாளையில் பார்த்தான். அன்றைய தினமே என் மகன் இராமநாதபுரம் வந்து ஒரு ஸ்கேன் எடுத்து பார்த்தான் என்றால் சரிதான். சென்னையில் ஹோட்டலில் வேலை பார்க்கும்போதும் அங்கு அடிக்கடி மது குடிப்பார் என்றால் தெரியாது. என் மகனுக்கு குடிப்பழக்கம் இருக்கின்ற காரணத்தினால், அவர் அடிக்கடி குடித்துவிட்டு பலநபர்களுடன் தகராறு செய்வதால் எங்கள் ஊரிலும், தொண்டியிலும், சென்னையிலும் பல எதிரிகள் உண்டு என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று என் மகன் சிக்கன்ரைஸ் வாங்கிவரச்சொன்னதின்பேரில் நான் வாங்கி வந்து என் வீட்டில் வைத்து கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கும்போது நானும், என் மகன் முகம்மது அபுபக்கர் மட்டும்தான் இருந்தோம் என்றால் சரியல்ல. நான் வாங்கிகொடுத்த சிக்கன்ரைசை என் மகன் வீட்டில் வைத்து சாப்பிட்டாரா என்றால் அவரது நண்பர் வீட்டிற்கு வெளியே இருப்பதால் அவருடன் சென்று சாப்பிடுவதாக எடுத்து சென்றார். என் மகனின் நண்பர் பெயர் தெரியுமா என்றால் நத்தர். நத்தரும், என் மகனும் சிக்கன்ரைசை எங்கு கொண்டு சென்று, யார்யாருடன் சேர்ந்து சாப்பிட்டார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் மகன் வீட்டிலிருந்து சிக்கன்ரைசை எடுத்து சென்ற பிறகு வீட்டிலிருந்த நாங்கள் எவ்வளவு நேரம் விழித்திருந்தோம் என்றால் நானும், என் மனைவியும் இரவு 12.00 மணிவரை விழிந்திருந்தோம், மற்றவர்கள் துாங்கிவிட்டார்கள். நாங்கள் துாங்கும்வரை என் மகன் வரவில்லை என்பதால் அவனை தேடிப்பார்த்தோமா என்றால் அக்கம்பக்கம் பார்த்தோம். நான் சொன்னது மாதிரி, சொன்ன தேதியில் என் மகன் சிக்கன்ரைஸ் வாங்கிவரச்சொல்லவில்லை என்றும், நானும் வாங்கிவரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி என் மகன் என்னிடம் சிக்சன் ரைசை வாங்கிக்கொண்டு வெளியே செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய டீக்கடை தொண்டியில் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய டீக்கடையை பொதுவாக இரவு 10.00 மணிவரை நடத்துவேன் என்றால் சரியல்ல, இரவு 08.00 – 09.00 மணிக்குள் அடைத்துவிடுவேன். நான் சொன்னது மாதிரி எதுவும் நடக்கவில்லை என்றும், என் மகன் இறந்த அன்று பகலிலேயே வீட்டிலிருந்து வெளியே சென்று பலஇடங்களில் குடித்துவிட்டு பலநபர்களுடன் தகராறு செய்தான் என்றால் தகராறு செய்தானா என்பது தெரியாது, அன்று மாலை 05.00 மணிக்கு

வீட்டிற்கு வந்துவிட்டான். எங்கள் ஊருக்கு வடக்கே ஆற்றங்கரை உள்ளதாக சொல்லியுள்ளேன், அது என்ன ஆறு என்றால் அந்த பகுதியில் மழைத்தண்ணீர் செல்லும் வகையில் கால்வாய் இருக்கும், அந்த பகுதிக்கு ஆற்றாங்கரை என்று சொல்லுவோம். ஆற்றாங்கரை பகுதியில் நிறையபேர் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான், அது குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். ஒருநபர் இறந்து கிடப்பதாக அக்கம்பக்கம் உள்ளவர்கள் பேசிக்கொண்டார்கள் என சொல்லியுள்ளேன், அந்த அக்கம்பக்கம் பேசிக்கொண்டவர்கள் யார் என குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சகுபர், ரெஜினா, பாதுஷா ஆகியோர்கள் பேசிக்கொண்டார்கள். குறிப்பாக இன்னார் இறந்து கிடக்கிறார் என அவர்கள் பேசிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் ஆற்றாங்கரை பகுதிக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் அரை கிமீ. நாங்கள் ஆற்றாங்கரை பகுதிக்கு செல்லும்போது ஊர்மக்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சுமார் 10 –20 பேர் இருந்தார்கள். என் மகன் இறந்துகிடந்த இடத்திற்கு அருகில் தென்னந்தோப்பு, புளியந்தோப்பு உள்ளது என்றால் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் கொல்லைகள்தான் உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் காம்பவுண்ட் சுவர் கட்டி தென்னை, புளியமரங்கள் உள்ளது என்றால் இறந்து கிடந்த இடத்தில் தென்னைமரமும், பக்கத்தில் புளியமரமும் இருந்தது. புளியமரம் இருந்த இடம் ஒரு வீட்டின் காம்பவுண்டு என்றால் சரிதான். என் மகன் இறந்துகிடந்த இடம் மற்றொரு காம்பவுண்டு என்றால் சரிதான். என் மகன் இறந்துகிடந்த இடம் மரங்கள் நிறைந்த பகுதி என்றும், பக்கத்தில் வீடுகள் இல்லை என்றும் சொன்னால், பக்கத்தில் வீடுகள் உள்ளது. என் மகன் இறந்து கிடந்த இடத்திற்கு அருகில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 2 வீடுகள். அந்த 2 வீடுகள் யார்யாருடைய வீடுகள் என்றால் தெரியாது, அந்த வீடுகளில் ஜெஸ்மியா மற்றொரு வீட்டில் புதுப்பட்டினத்தை சேர்ந்த ஒரு முஸ்லீம் குடும்பம் உள்ளது, பெயர் தெரியாது. கொல்லையைத்தாண்டி ஒரு வீடு உள்ளது, அந்த வீடு சைபுல்லா என்பவர் வீடு. நான் என் மகன் இறந்துகிடந்த இடத்திற்கு சென்றபோது அந்த வீட்டில் குடியிருந்தவர்கள் இருந்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவம் நடந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே அங்குள்ள நபர்கள் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்து போலிசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் இல்லை. என் மகன் முகம்மது அபுபக்கர் இறந்துகிடப்பதை பார்த்தவுடனே

நானும் என் மகனும் காவல் நிலையத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்லசொல்ல காவல் நிலையத்தில் இருந்த ஒரு போலிசார் எழுதினார், நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட சம்மனில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். சம்மனில் உள்ள கையெழுத்தும், புகாரில் உள்ள கையெழுத்தும் வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல. வித்தியாசம் உள்ளது என்றும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் என் மகன் இறப்பில் யார்மீதும் சந்தேகம் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் மகன் மது அருந்துவார் என்றோ, அவரின் வேறு நடவடிக்கை பற்றியோ புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வீடு எங்கு உள்ளது என்றால் எங்கள் தெருவிலிருந்து 2 தெருதள்ளி மேற்குத் தெருவில் உள்ளார். என் மகன் இறந்துகிடந்த வீட்டு காம்பவுண்டுக்கு எதிரே ரோடும், அந்த ரோட்டுக்கு கிழக்கே ராயல்ஸ்போர்ட்ஸ் என்ற டென்னிஸ் விளையாட்டு மைதானமும், வீடுகளும் உள்ளது. என் மகன் இறந்து கிடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரேஒரு வீடு உள்ள காம்பவுண்டு உள்ள வீடு என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் என் மகன் எதிரியால் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்துவிட்டு அங்கிருக்கும்போது போலிசார் எதிரியை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். என் மகனுக்கு எனக்கு தெரிந்தவரை எங்கள் ஊரில் எத்தனை நண்பர்கள் இருப்பார்கள் என்றால் 20. அந்த 20 நபர்களுடனும், என் மகன் ஊருக்கு வந்தால் வெளியே சென்று மது அருந்துவார் என்றால், என் நபர் இருக்கிறார்களோ அவர்களுடன் வெளியே செல்வான். நான் புகார் கொடுத்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்திலும், காவல் நிலையத்திலும் வைத்து விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் புகார் கொடுத்த அன்று காலை 10.00 மணிக்கு விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் எப்போது வைத்து விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்று மாலை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது எதிரியும் அங்கு இருந்தார் என்றால் இல்லை. என் முதல் விசாரணையில் நான் காவல் நிலையத்தில் இருக்கும்போது போலிசார் காலை 09.00 மணியளவில் எதிரியை

விசாரணைக்காக அழைத்து வந்துள்ளார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாகவே புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது எதிரியும், என் மகனும் நண்பர்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் இருவரும் நண்பர்கள்தான். என் மகன் எதிரி வீட்டிற்கு மது அருந்த செல்லும்போது, என் மகனுக்கும், எதிரியின் மனைவிக்கும் தவறான பழக்கம் ஏற்பட்டது என போலிசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. அதன் அடிப்படையில்தான் எதிரியின் வீட்டிற்கு சென்ற என் மகனை எதிரி கொலை செய்துவிட்டார் என போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியிருப்பேன். என் மகனுக்கு குடிப்பழக்கம் இருப்பதால், அடிக்கடி பலநபர்களுடன் தகராறு செய்து பலநபர்களின் விரோதம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த விரோதத்தால் வேறொரு நபர்களின் விரோதத்தினால் இறப்புக்கு உள்ளாகியிருக்கலாம் என்றால் சரியல்ல. எதிரிக்கும், எங்கள் குடும்பத்திற்கும் வேறுசில காரணங்களால் ஏற்கனவே விரோதம் உண்டு என்றும், அதை மனதில் வைத்து என் மகனை எதிரிதான் கொலை செய்துவிட்டதாக பொய்யாக புகார் அளித்துவிட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.